**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**மத்திய அதிவேகப்பாதை திட்ட பிரிவு 3**
**(பொத்துஹர தொடக்கம் கலகெதர வரை)**

# உள்ளூர் தனிநபர் ஆலோசகருக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பொத்துஹர (0+000 தூர அளவு) தொடக்கம் கலகெதர (32+450 தூர அளவு) வரை மத்திய அதிவேகப்பாதை திட்ட பிரிவு 3 இன் நிர்மாண மேற்பார்வை/ ஒப்பந்த நிர்வாகத்தில் அதன் அணியின் ஈடுபாட்டை மேம்படுத்த பின்வரும் பதவிக்காக அனுபவம் மற்றும் தகுதி பெற்ற இலங்கை நாட்டின் தனிநபர்களை ஆட்சேர்ப்பதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) உத்தேசித்துள்ளது.

| வ.இ. | பதவி | தேவையான எண். | அதிகபட்ச வயது எல்லை (ஆண்டுகள்) |
|---|---|---|---|
| 1 | குழுத் தலைவர் (Team Leader) | 01 | 75 |

அனுபவம் மற்றும் தகுதி பெற்ற தனிநபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமை/ அனுபவ தேவைகள் மற்றும் ஒவ்வொரு பதவிக்கும் தொடர்புபட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் உட்பட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் படிவம், குறிப்பு விதிமுறையை (TOR) 2026.07.03 தொடக்கம் 2026.07.14 வரை வேலை நாட்களுக்குள் எழுத்துமூல கோரிக்கை ஒன்றில் பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் 1, 3ஆவது மாடி, மத்திய அதிவேகப்பாதை திட்ட பிரிவு 3, திட்டப் பணிப்பாளரிடம் இருந்து கட்டணம் இன்றி பெற முடியும் அல்லது www.rda.gov.lk முகவரியில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

ஆலோசகர்கள் அவர்களின் தகைமைகள், அனுபவம் மற்றும் செயல்திறன் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். அவர்களின் ஊதியம் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டது என்பதோடு ஒப்பந்தம் 2026 இன் 3 ஆவது காலாண்டுக்குள் ஆரம்பித்து 365 நாட்களுக்காக பணியமர்த்தல் அடிப்படையில் அமையும் மற்றும் ஆலோசகரின் செயல்திறனை கருத்தில் கொண்டு தேவைக்கு அமைய நீடிக்கக் கூடியதாகும்.

முழுமையான சுயவிபரக்கோவை மற்றும் அனுபவம் மற்றும் தகைமையை நிரூபிக்கும் தொடர்புடைய ஆவணங்களின் பிரதிகளுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்/களை 2026.07.15 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, "மகநெகும மஹமெதுர", 7ஆவது மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, பெறுகை நிபுணருக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். முன்மொழிவுகள் 2026.07.15 ஆம் திகதி சமர்ப்பிக்கும் இடத்தில் பி.ப. 2.15 இற்கு திறக்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 011 2877708 மற்றும் 011 2862801 இல் மத்திய அதிவேகப்பாதை திட்ட பிரிவு 3, திட்ட பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து பெற முடியும்.

**தலைவர்**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**
**"மகநெகும மஹமெதுர"**
**டென்சில் கொப்பேகடுவ வீதி**
**பத்தரமுல்ல.**